තොරතුරු දැනගැනීමේ අයිතිවාසිකම පිළිබඳ කොමිෂන් සභාව

## தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு

**RIGHT TO INFORMATION COMMISSION (CONSTITUTED UNDER RTI ACT, No 12 OF 2016)**

.......................................................................................................................................

ලිපිනය: කාමර අංක 2- 203-204, බණ්ඩාරනායක ජාත්‍යන්තර සම්මන්ත්‍රණ ශාලා පරිශ්‍රය, බෞද්ධාලෝක මාවත,කොළඹ 07/
விலாசம்:அறை இல 2- 203-204, பிஎம்ஐசிஎச் ,பௌத்தாலோக்க மாவத்தை , கொழும்பு 07/
Address : Room No 2- 203-204, BMICH, Bauddhaloka Mawatha, Colombo 07

දුරකථන/ தொலைபேசி/Telephone: 011 2691626; ෆැක්ස්/ தொலைநகல்/Fax : 011 2691625
විද්‍යුත් තැපෑල/ மின்னஞ்சல்/ e- Mail rti.commission16@gmail.com


# இலங்கையின் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு பல மேன்முறையீடுகளை விசாரித்து முடித்தது, மேலும் பல விசாரிப்பதற்கு உள்ளன

**2017 மே 30ம் திகதி கொழும்பு, ஊடக அறிக்கை:** 2017 பெப்ரவரி 03ம் திகதி, 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க இலங்கையின் தகவலறியும் உரிமைச் சட்டம் அமுலாக்கப்பட்டு ஏறக்குறைய மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. இந்நிலையில் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு இக் காலப்பகுதியிலேயே ஆணைக்குழுவினை நாடிய பல குறிப்பிடத்தக்க பகிரங்க அதிகாரசபைகள் மற்றும் ஏனைய பிரஜைகளுக்கு அதன் நன்றியைத் தெரிவிக்கின்றது. இச் சட்டத்தின் கீழ் உறுதிப்படுத்தப்பட்ட ‘தகவலறியும் உரிமையை’ பெற பல பொது மக்கள் ஆணைக்குழுவைப் பயன்படுத்துவதில் ஆர்வமாகவும் ஆதரவாகவும் உள்ளனர் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. சில பகிரங்க அதிகாரசபைகள் உண்மையாகவே, இச் சட்டத்தின் உயிர்ப்பான செயலூக்க அடிப்படையிலான வெளிப்படுத்தல் முறைமைகளுக்கு தாமாகவே முன்வந்து உடன்படுவது எமக்கு மிகவும் ஊக்கமளிக்கின்றது.

இச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சுதந்திரமான மேன்முறையீட்டு அமைப்பு என்ற ரீதியில், அண்மையில் ஆணைக்குழு இரண்டு மேன்முறையீடுகளை விசாரித்து முடித்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றது. அந் நடவடிக்கையின் போது, சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் ஆணைக்குழுவின் முன்னிலையில் சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டது. பகிரங்க அதிகாரசபைகள் மற்றும் சட்டத்தின் கீழ் மேன்முறையீடு செய்தவர் ஆகிய இருவரும் கோரிய தகவல்களை திருப்தியுடன் பெற்றுக்கொண்டனர் என்பதை எமக்கு அறிவித்தனர். தற்சமயம், மேலும் பல மேன்முறையீடுகள் விசாரிப்பதற்கு உள்ளன.

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் நடைமுறை ரீதியிலான ஏனைய விடயங்கள் தொடர்பில் தங்களை வழிநடத்துமாறு கோரி பகிரங்க அதிகாரசபைகளிடமிருந்து ஆணைக்குழுவுக்குச் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் சில எமக்கு கிடைத்தவண்ணம் உள்ளன. இத்தோடு இணைந்ததாக தகவல்கள் மறுக்கப்பட்டு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் பிரஜைகளிடமிருந்து கடிதங்களும் கிடைத்துள்ளன. (இதில் அரச உத்தியோகத்தர்கள் தங்களையும் உள்ளடக்கியுள்ளனர்). கடந்த மாதங்களில் ஏறத்தாழ முன்னூறுக்கு மேற்பட்ட அத்தகைய கடிதங்கள் எம்மால் பெறப்பட்டுள்ளன. இது தகவலறியும் உரிமை தெளிவாகப் பயன்படுத்தப்படுவது தொடர்பாக ஆணைக்குழுவிற்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. கடிதங்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொண்ட காலக்கிரம அடிப்படையில், பதில்கள் தனிப்பட்டோருக்கு நாம் அனுப்பி வருகின்றோம்.

இவ் ஆணைக்குழு தற்போதும் அதன் தேவைக்கு ஏற்ப ஊழியர்கள் இல்லாது ஒரு தற்காலிக காரியாலயத்தில் பல தடங்கல்களுக்கு மத்தியிலும் இயன்றளவு துரிதமாகவே செயற்படுகிறது.

பகிரங்க அதிகாரசபைகளிலுள்ள தகவல் அளிக்கும் அலுவலர்கள் கோரும் ஆலோசனைகளை குறிப்பாக கருத்தில் கொள்கையில், ஆணைக்குழுவானது சட்டத்தின் பாகம் 5 பிரிவு (5)க்கு அமைவாக பதில் வழங்குகிறது. இது நடைமுறை சம்பந்தப்பட்ட ஆலோசனைகள் ‘கோரும் எந்தத் தகவலையும் கொடுக்க வேண்டும்’ (‘உழநெஉவநன றவைா வாந பசயவெ ழக யஉஉநளள வழ யலெ கைெழசஅயவழைெ’) என்ற சட்டத்தின் பகுதியுடன் தொடர்பு கொண்டது. ஆனாலும் சட்ட விண்ணப்பத்துடன் தொடர்புபட்ட,

முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்குவது இயலாத காரியம் என்பதை கவலையுடன் தெரிவிக்கின்றோம். இதே விடயத்தின் ஆணைக்குழுவுக்கு முன்னிலையிலான மேன்முறையீட்டு விசாரணையை பாரபட்சமானதாக்கும் என்பதனால் இவ்விடயம் தொடர்பில் ஆணைக்குழு தகவல்களை அதிகளவு வெளிப்படுத்துவதுடன் வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளுக்கு உட்பட்டு பொது மக்கள் நலனே முக்கியமானது என்ற தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பான முதன்மையான குறிக்கோளை வலியுறுத்த விரும்புகின்றது.

ஆணைக்குழுவின் சட்டக் கடமையாக, தகவல் அலுவலர்கள் மற்றும் குறித்தளிக்கப்பட்ட அலுவலர்களை நியமிக்கவும் அவர்களது பெயர்களை பகிரங்கப்படுத்துவதற்கும், இன்னமும் இணங்காத பகிரங்க அதிகாரசபைகளுக்கு அதனைச் செய்யுமாறு கோருகின்றது.

இவ்வாணைக்குழு அதன் இலட்சினையை இனங்கண்டுள்ளதுடன் அதன் இணையத்தளத்தை உருவாக்கியுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றது. இவ் இணையத்தளத்தில் தற்போது அடிப்படை விடயங்கள் இருப்பினும் காலப்போக்கில் அது மேம்படுத்தப்படும். இவ்வாணைக்குழுவினது 2017-2019வரை நடவடிக்கைகளுக்கு பயன்படத்தக்க திட்டம் (ளுஜீ), முடிவுபெற்ற மேன்முறையீடுகள், தகவலறியும் உரிமையுடன் தொடர்புபட்ட ஆவணங்களின் இணைப்புகளை இவ்விணையத்தளம் கொண்டிருக்கும். முக்கியமாக இவ்விணையத்தளம் சட்டத்தின் (10ஆம் பிரிவின் கீழும்) 42ஆம் பிரிவிலுமுள்ள விசாரணைக்கு ஏற்ற விதிமுறைகள் பற்றிய வரைவுகள், சட்டத்தின் 8ஆம் மற்றும் 9ஆம் செயலூக்க அடிப்படையிலான வெளிப்படுத்தல் தொடர்பான வழிகாட்டல்களையும் கொண்டிருக்கும். இறுதியாக தீர்மானிக்கப்பட்ட வடிவத்தினை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு முன்னர் இவ்விதிமுறை வரைவுகள் மற்றும் வழிகாட்டல்கள் தொடர்பான பின்னூட்டல்கள் பெற்றுக்கொள்வதற்கு பொது மக்களிடத்தில் இணையத்தளத்தின் மூலமாக பகிரப்படும்.

ஆணைக்குழுவானது இது தொடர்பான பொதுமக்களது கருத்துக்கள்ஃவிமர்சனங்களை வரவேற்கும் அதேவேளை இலங்கையில் ஒளிவுமறைவின்றிய பொறுப்புடைமையான கலாசாரத்தை உருவாக்குவதற்கும் மேலும் தற்போது உருவாகிவரும் தகவல் அறியும் உரிமைக்கான சூழ்நிலைமைக்கு மக்களது பங்கேற்பு தேவை என்பதை திடமாக நம்புவதனால் சட்டத்தின் கீழ் அரச உத்தியோகத்தர்களுக்குத் தேவையான பயிற்சி நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளை விரைவில் மேற்கொள்வதற்கு அது எதிர்பார்க்கின்றது.

...............................................